1975 நவம்பர் 11]

அப்புறப்படுத்தி அதனை ஜாரி செய்தால், நிச்சயமாகப் பலன் ஏற்படும். அதை அரசு பரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, புதிய யோசனை ஒன்றை அங்கத்தினாவர்கள் குறிப்பிடுகிறார்கள். ஏற்கனவே உள்ள குளத்தை யாரோ ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள் என்றும் கூறுகிறார்கள். ஆக்கிரமிப்பாளர்கள் யார் என்பது தெரியவில்லை. ஆக்கிரமிப்பாளர்கள் யாராக இருந்தாலும் அவர்களை அப்புறப்படுத்த வேண்டியது அவசியம் என்பதை ஒத்துக் கொள்கிறேன். அப்புறப்படுத்த வேண்டிய நடவடிக்கை எடுத்து, புதிய யோசனை சாத்தியக்கூறானதா இல்லையா என்பதை அரசு பரிசீலிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

சின்னக்கரையின் குறுக்கே பாலம்

* 257 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருப்பூர்—பல்லடம் பாதையில் சின்னக்கரையின் குறுக்கே பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இல்லை.

திரு. சு. துரைசாமி: தலைவரவர்களே, திருப்பூரிலிருந்து உடுமலைப்பேட்டை, திருப்பூரிலிருந்து பொள்ளாச்சி, திருப்பூரிலிருந்து கோயம்புத்தூர் ஆகிய மூன்று ஊர்களுக்குச் செல்லக் கூடிய முக்கியமான பாதையில் அந்த ஓடை இருக்கிறது. சிறு மழை பெய்தாலுங்கூட போக்குவரத்து மணிக்கணக்கிலே தாமதப் படுகிறது. அந்த நிலையைப் போக்க அரசாங்கம் விரைவாகப் பாலம் கட்ட ஆவன செய்யுமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே பாலத்தின் அவசியத்தை அரசு முழுக்க முழுக்க உணர்ந்திருக்கிறது என்றாலும் நிதிப் பற்றாக் குறை காரணமாகத்தான் இப்பொழுது சாத்தியமில்லையென்று நான் தெரிவித்தேன்.